Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம்
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, ஜூலை 28, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 14

# முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு "பாரத ரத்னா விருது" மத்திய அரசுக்கு பரிந்துரை

## விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவரணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்

## சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் பங்கேற்பு



திண்டிவனம், ஜூலை 28 2021: திண்டிவனத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் மாவட்ட மாணவரணி ஆலோசனை கூட்டம் நடந்தது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் ஜெயராம் திருமண மண்டபத்தில் நடந்த ஆலோசனை கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எம்.டி. பாபு தலைமை தாங்கினார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மாண்புமிகு தமிழக முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் தமிழக முதலமைச்சரும், கழகத்தின் தலைவருமான தளபதி அவர்களுக்கு மாணவரணி சார்பாக வாழ்த்துக்கள் தெரிவிப்பது, தி.மு.க கூட்டணிக்கு வாக்களித்து கழகத் தலைவரை முதலமைச்சராக்கிய தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிப்பது, புதியதாக வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சகம் ஒன்றை உருவாக்கி அதை நமது மாவட்ட கழக செயலாளரை அமைச்சராக நியமனம் செய்ததற்கு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்களுக்கு மிகுந்த நன்றி தெரிவிப்பது, புதியதாக அமைச்சர் பதவி வகித்திருக்கும் நமது மாவட்ட கழகச் செயலாளர் அவர்களுக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்வது, உலகத் தமிழர்களுக்காகவும், தமிழக மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்தியாவின் உயரிய விருதான "பாரத ரத்னா" விருதினை வழங்குமாறு மாவட்ட மாணவரணி சார்பாக மத்திய அரசை கூட்டத்தின் வாயிலாக வலியுறுத்தி கேட்டுக் கொள்வது, திண்டிவனம் உழவர் சந்தையை புதுப்பித்து தந்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது, வீடூர் அணையின் நீர்மட்டத்தை உயர்த்தி தந்ததற்கு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.சேதுநாதன், சீதாபதி சொக்கலிங்கம், மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் ப.சேகர், பொதுக் குழு உறுப்பினர் என்.ரமணன், நகரப் பொருளாளர் ஆசிரியர் கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் பாங்கை சொக்கலிங்கம், நல்லூர் கண்ணன், பழனி, வழக்கறிஞர் அணி கே.சி.ஆதித்தியன், அருணகிரி, தொண்டரணி டி.ஜி. ராஜசக்தி, மாணவரணி ரிஸ்வான், ஒய்.முஸ்தபா, அன்னை சந்தானம், மைனர் மணிகண்டன், கார்த்தி, ராபின்சன், சிங்கனூர் பார்த்திபன், கூட்டேரிப்பட்டு ராஜா, பரணிதரன், அசோக்குமார் உள்ளிட்ட திரளான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஏழு நாளில் 70 கோடிக்கு வளர்ச்சிப் பணிகள்! ஒட்டன்சத்திரம் தொகுதி மக்களை அசத்தும்

## உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி



ஒட்டன்சத்திரம், ஜூலை 28, 2021: தமிழ்நாடு முதல்வராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்று 75 நாட்களுக்கு மேலாகிவிட்டது. அமைச்சரவையில் சீனியர்களைவிட ஜூனியர்களுக்குப் பல முக்கிய துறைகளைக் கொடுத்து களமிறக்கியிருக்கிறார். அதோடு அமைச்சர்கள் யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி உளவுத்துறை மூலம் அமைச்சர்களின் செயற்பாடுகளை முதல்வர் ஸ்டாலின் கண்காணித்துக் கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்ற அர.சக்கரபாணிக்கு உணவு மற்றும் வழங்கல் துறை அமைச்சர் பதவியை ஸ்டாலின் கொடுத்திருக்கிறார். கட்சிக்காக முப்பது வருடங்களுக்கும் மேலாக உழைத்துக்கொண்டு, தொகுதி மக்கள் மத்தியில் நல்ல பெயர் எடுத்து வந்ததின் மூலமே தொடர்ந்து ஆறாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக அர.சக்கரபாணி வெற்றிபெற்றார். அதன் அடிப்படையில்தான் ஸ்டாலினும் தனது அமைச்சரவையில் இடம் கொடுத்தார். அதோடு கொங்கு மண்டலத்தில் பரவிவந்த கரோனா தொற்றைக் கட்டுப்படுத்தவும் சக்கரபாணியை களமிறக்கினார். அதன் மூலம் இரவு பகல் பாராமல் அதிகாரிகளைக் கொண்டு கரோனா தடுப்புப் பணியில் தீவிரம் காட்டி கட்டுப்படுத்தினார். கரோனாவிலிருந்து மக்கள் காப்பாற்றப்பட்டனர். அதைத் தொடர்ந்து தனது துறையில் தீவிரம் காட்டிய அர.சக்கரபாணி, டெல்டா மாவட்டங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களை ஆய்வு செய்து, அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டங்களையும் நடத்தினார். அதோடு ரேஷன் கடைகளுக்கும் விசிட் அடித்து ஆய்வு செய்ததுடன் மட்டுமல்லாமல், அங்கு வந்த பொதுமக்களிடம் பொருட்கள் தரமாகவும் எடை குறையாமலும் கிடைக்கிறதா என்று கேட்டு அவர்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றிவருகிறார். அதோடு கடந்த ஒருவாரமாக ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள கேதையுறும்பு, புளியமரத்துக்கோட்டை, ஜோகிபட்டி, இடையகோட்டை, மார்க்கம்பட்டி, குத்திலிப்பை உள்பட பத்துக்கும் மேற்பட்ட ஊராட்சி பகுதிகளிலும், அதுபோல் தொப்பம்பட்டி ஒன்றியத்தில் உள்ள கள்ளிமந்தையம், கூத்தாம்பூண்டி, கரியாம்பட்டி, 16-புதூர், தேவத்தூர், கொத்தையம், பொருளூர், கீரனூர், மரிச்சிலம்பு, புஷ்பத்தூர் உள்பட பத்துக்கும் மேற்பட்ட ஊராட்சி பகுதிகள் மற்றும் ஒட்டன்சத்திரம் நகர் பகுதிகளிலும் குடிநீர் மேல்நிலை தொட்டி, தரம் உயர்த்தப்பட்ட சாலைகள், சமுதாயக்கூடம், காவேரி கூட்டுக் குடிநீர், கலையரங்கம், ஊராட்சி அலுவலகம், அங்கன்வாடி, சாக்கடை, கழிப்பறை, பள்ளிகளில் தடுப்புச் சுவர்கள் உள்பட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக ரூ. 70 கோடி வரை ஒதுக்கீடு செய்து, பூமிபூஜையும் போட்டு பணிகளை அங்கங்கே தொடங்கிவைத்தார். அதுபோல் தனது எம்.எல்.ஏ. நிதி மூலம் கீரனூரில் கட்டப்பட்ட இலவச ஆம்புலன்ஸ் சேவை, சமுதாயக் கூடம், சுகாதார மையம் உள்பட சில புதிய கட்டடங்களையும் திறந்துவைத்தார். இப்படி ஒரே வாரத்தில் ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள இரண்டு ஒன்றியம் மற்றும் நகரத்தில் ரூ. 70 கோடிக்கு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அமைச்சர் தொடங்கிவைத்ததைக் கண்டு தொகுதி மக்களே அசந்துபோய்விட்டனர்.

இது சம்பந்தமாக ஒன்றிய பொறுப்பிலுள்ள சில உ.பி.களிடம் கேட்டபோது, "இத்தொகுதியைத் தொடர்ந்து எங்க அமைச்சர் சக்கரபாணி தக்கவைத்து வருவதாலேயே கடந்த 10 ஆண்டுகளாக அதிமுக ஆட்சியில் தொகுதி வளர்ச்சிப் பணிகள் சரிவர செய்ய முடியாமல் முட்டுக்கட்டை போட்டு வந்தனர். அப்படியிருந்தும் அமைச்சர், தொகுதி மக்களுக்காக பல போராட்டங்களை நடத்தி, அடிப்படை வசதிகளை ஓரளவுக்குப் பூர்த்திசெய்து கொடுத்தார். தற்போது தலைவர் ஸ்டாலின் முதல்வராக வந்ததின் மூலம் அர.சக்கரபாணி அமைச்சராகிவிட்டதால் தொகுதியில் உள்ள அனைத்து வளர்ச்சித் திட்டப்பணிகளையும் தொடங்கிவைத்ததுடன் மட்டுமல்லாமல் மாவட்ட அதிகாரிகளை அழைத்து ஆய்வுக் கூட்டம் நடத்தி, தொகுதி வளர்ச்சிப் பணிகளைக் கூடிய விரைவில் முடித்து, மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். அதை அடுத்த ஆய்வுக் கூட்டத்தில் தெரியப்படுத்த வேண்டும் என அதிகாரிகளுக்கு அதிரடி உத்தரவும் போட்டிருக்கிறார். அதனாலேயே அதிகாரிகளும் அசுர வேகத்தில் பணியைத் தொடங்கியிருக்கிறார்கள். அதோடு மாவட்ட அளவில் ஐந்து லட்சம் மரக்கன்றுகளை நடும் பணிகளையும் தொடங்கிவைத்திருக்கிறார்" என்று கூறினார்கள்.

ஆக, தளபதி ஸ்டாலின் அமைச்சரவையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அமைச்சர் அர.சக்கரபாணியின் செயல்பாடு என்பது துறை ரீதியாகவும் தொகுதி வளர்ச்சிப் பணி மூலமும் மக்கள் பாராட்டுக்குரியவராக இருந்துவருகிறார்.

# திண்டிவனத்தில் சிதிலமடைந்த இந்திரா காந்தி பேருந்து நிலையம் இடிக்கும் பணி :

## அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் நேரில் ஆய்வு



திண்டிவனம், ஜூலை 28 2021: திண்டிவனத்தில் சிதிலமடைந்து காணப்பட்ட இந்திராகாந்தி பேருந்து நிலையத்தை இடிக்கும் பணியினை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பார்வையிட்டார். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் சிதிலமடைந்து காணப்பட்ட இந்திராகாந்தி பேருந்து நிலையத்தை மழைக்காலத்தில் உயிர் பலி ஏற்படுவதற்கு முன்பாக அப்புறப்படுத்த வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்த நிலையில், சில தினங்களுக்கு முன்பு அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பார்வையிட்டு அதனை இடிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்நிலையில் இந்த பேருந்து நிலையத்தைக் கடந்த சில நாட்களாக ஜே.சி.பி இயந்திரம் கொண்டு இடிக்கும் பணியில் நகராட்சி நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இதனை தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் நேரில் பார்வையிட்டார். அப்போது பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த அவர், திண்டிவனம், இந்திராகாந்தி பேருந்து நிலையம் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று இடிக்கப்பட்டு வருகிறது என்று கூறினார். அப்போது பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர் விழுப்புரத்தில் அ.தி.மு.க சார்பில் நடைபெறும் போராட்டம் அவர்களை மக்களிடத்தில் நாங்கள் இன்னும் இருக்கின்றோம் என்று கூறும் அளவிற்கான போராட்டமேயன்றி எந்தவிதமான காரணமும் இல்லாத, நியாயமும் இல்லாத போராட்டம் என்பது மக்களுக்கு தெரியும் என்றும், மேலும் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் அவர்களை அப்புறப்படுத்திய நிலையில் அவர்களை அவ்வப்போது பொதுமக்களுக்கு நினைவுபடுத்துவதற்காக நடைபெறுகின்ற செயல்களில் இதுவும் ஒன்று என்று கூறினார்.

# திண்டிவனத்தில் துப்புரவு பணியாளர்களுக்கு

## அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் நிவாரண உதவிகள் வழங்கல்



திண்டிவனம், ஜூலை 28 2021: திண்டிவனத்தில் சிறுபான்மையினர் நல அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் நூற்றுக்கணக்கான துப்புரவு பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். தி.மு.க சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பொது மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது . இதன் ஒரு பகுதியாக திண்டிவனத்தில் நூற்றுக்கணக்கான துப்புரவு பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு அரிசி, காய்கறிகள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை சிறுபான்மை நல அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் வழங்கினார் . கலை இலக்கிய அணி அமைப்பாளர் சீனிராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சீதாபதி சொக்கலிங்கம், ஆர்.சேதுநாதன், மாநில மருத்துவர் அணி ப.சேகர், மாநில பொதுக்குழு உறுப்பினர் என்.ரமணன், நகர பொருளாளர் ஆசிரியர் கண்ணன்,

மாவட்ட வழக்கறிஞர் அணி கே.சி.ஆதித்தன், அருணகிரி, மாவட்ட தொண்டரணி டி.ஜி.ராஜசக்தி, மலர் செல்வம். மாவட்ட பிரதிநிதிகள் வி.எஸ்.முருகன் ஆர்.ரவிச்சந்திரன், மயிலம் ஒன்றிய செயலாளர் மணிமாறன், மாவட்ட மாணவரணி ஒய்.முஸ்தபா, நகர துணை செயலாளர் வீ.சி.அசோக்குமார், சுரேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். இதில் கலந்துக் கொண்ட பயனாளிகள் சமூக இடைவெளியோடு நின்று பொருட்களை வாங்கிச் சென்றனர்.

# உத்தராகண்டிலிருந்து துபாய்க்கு முதல் முறையாக காய்கறிகள் ஏற்றுமதி

புதுதில்லி, ஜூலை 28, 2021: உத்தராகண்டிலிருந்து துபாய்க்கு முதல் முறையாக இன்று காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஹரித்துவார் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட வெண்டைக்காய், பாகற்காய், பேரிக்காய், கருவேப்பிலை ஆகியவை துபாய்க்கு இன்று ஏற்றுமதி செய்யப்பட்டது. உத்தராகண்ட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தினை வகைகள் கடந்த மே மாதம் டென்மார்க்குக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இங்கிருந்து வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்யும் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் விவசாயப் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம் (அபெடா) தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. 2020-21ம் ஆண்டில், இந்தியா ரூ.11,019 கோடிக்கு பழங்கள் மற்றும் காய்கறிகளை ஏற்றுமதி செய்தது. அதற்கு முந்தைய ஆண்டில் இது ரூ.10,114 கோடியாக இருந்தது. தற்போது காய்கறி பழங்கள் ஏற்றுமதி 9 சதவீதம் அதிகரித்துள்ளது.

# வீடூர் நியாயவிலைக் கடை மேற்கூரை பெயர்ந்து விழுந்து இரு பெண்கள் படுகாயம்



திண்டிவனம், ஜூலை 28 2021: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருகே உள்ள வீடூர் காலனி பகுதியில் அமைந்துள்ள மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் செயல்படும் நியாய விலை கடையில் ராஜேஸ்வரி, கிருஷ்ணவேணி, தெய்வகன்னி, சித்ரா ஆகியோர் மூலம் அப்பகுதி பொது மக்களுக்கு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று காலை திடீரென கட்டிடத்தின் மேற்கூரை காரைகள் பெயர்ந்து விழுந்ததில் ராஜேஸ்வரி, தெய்வகன்னி ஆகிய இரு பெண்கள் காயமடைந்தனர். இதில் தெய்வக் அணிக்கு பலத்த காயம் ஏற்பட்டதை அடுத்து அவர் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இங்குள்ள பாழடைந்த நிலையில் உள்ள இந்த நியாய விலை கட்டிடத்தை அகற்றிவிட்டு புதிய கட்டிடத்தில் நியாய விலை கடை செயல்பட தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 7 ஆண்டுகளை நிறைவு செய்தது 'மைகவ்' இணையதளம்

புதுதில்லி, ஜூலை 28, 2021: பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட 'மைகவ்' இணையதளம், 7 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. ஆன்லைன் தளம் மூலம் மக்களுக்கு நெருக்கமாக, அரசை கொண்டு செல்ல 'மைகவ்' (https://www.mygov.in/) என்ற இணையதளத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி 2014ம் ஆண்டு ஜூலை 26ம் தேதி தொடங்கி வைத்தார். இதன் மூலம் நாட்டில் சமூக மற்றும் பொருளாதார மாற்றத்துக்கு தேவையான கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் மக்கள் பகிர்ந்துக் கொண்டனர். இந்த தளம் தனது 7 ஆண்டு பயணத்தை நிறைவு செய்துள்ளது. மக்கள் பங்களிப்பு நிர்வாகத்தை வளர்த்ததில், மைகவ் இணையதளத்தின் பங்களிப்பை நினைவு கூறும் நிகழ்ச்சி, 'நேர்மறையான எனது அரசு (விஹ்நிஷீஸ் றிஷீவெவீமீ'வீஸ்மீ)' என்ற கருப்பொருளில் நடத்தப்பட்டது. சமூக இணையதளத்தை நேர்மறையாக பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. கொரோனா பற்றி தவறான தகவல்கள் நாட்டில் பரவும் நிலையில், மைகவ் இணையதளத்தின் கொரோனா உதவி மையம் - வாட்ஸ் அப் கலந்துரையாடல் மூலம் பொய் செய்திகளுக்கும் பதில் அளிக்கும் வகையில் நம்பகமான செய்திகளை வழங்கியது. மக்களை ஈடுபாடு கருத்தை முன்னெடுத்துச் சென்று, சிறந்த நிர்வாக இலக்கை அடைய, மைகவ் உத்தரப்பிரதேசம் இணையதளத்தை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், உத்தரப் பிரதேச முதல்வர் திரு யோகி ஆதித்யாநாத் ஆகியோர் இணைந்து இன்று தொடங்கிவைத்தனர். மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ராஜீவ் சந்திரசேகர், இத்துறை செயலாளர் திரு அஜய் பிரகாஷ் ஷானே, மைகவ் இணையதள தலைமை நிர்வாக அதிகாரி திரு அபிஷேக் சிங் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். மைகவ் குழுவின் பங்கை பாராட்டிய மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், ''மக்களுக்கு டிஜிட்டல் அதிகாரம் அளிப்பதன் மூலம், அனைத்தும் உள்ளடங்கிய நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்தும் பிரதமரின் கனவை நனவாக்க மைகவ் இணையதளம் பணியாற்றியுள்ளது'' என்றார். ஆட்சி நிர்வாகம் மற்றும் வளர்ச்சியில் மக்களின் தீவிர பங்களிப்பை ஊக்குவிப்பதில் மைகவ் இணையதளம் ஆற்றிய புதுமையான பங்கை உத்தரப் பிரதேச முதல்வர் திரு யோகி ஆதித்யநாத் மற்றும் மத்திய அமைச்சர் திரு ராஜீவ் சந்திரசேகர் ஆகியோர் பாராட்டினர்.

ஹலோ மிரர் மெட்ராஸில் விளம்பரம் செய்து பயன் பெறுவீர்

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மேகதாட்டு விவகாரம்: மைசூர் மற்றும் சென்னைக்கு இடையேயான 1892 ஒப்பந்தம் குறித்து அமைச்சரின் விளக்கம்

புதுதில்லி, ஜூலை 28, 2021: நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் கேள்விகளுக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த மத்திய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் கீழ்காணும் தகவல்களை அளித்தார். ஆறுகளின் குறுக்கே புதிய பாசன திட்டங்களை செயல்படுத்துவது குறித்து மைசூர் மற்றும் மதராஸ் மாநிலங்களுக்கிடையே (தற்போதைய கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு) 1892-ம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. இதன் படி, புதிய நீர்த்தேக்கம் அல்லது அணையை மைசூரு அரசு கட்ட விரும்பினால், அதன் முழு திட்டத்தையும் சென்னை அரசுக்கு அனுப்பி அதன் ஒப்புதலை பணி தொடங்குவதற்கு முன் பெற வேண்டும். அதே சமயம், அதன் உரிமையை பாதுகாப்பதற்கு தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் ஒப்புதல் அளிக்க சென்னை அரசு மறுக்கக் கூடாது. மேகதாட்டு நீர்த்தேக்கம் மற்றும் குடி தண்ணீர் திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கையை மத்திய நீர் ஆணையத்திடம் கர்நாடக அரசு சமர்ப்பித்தது. மத்திய நீர் ஆணையத்தின் ஆய்வுக் குழு விரிவான அறிக்கையை தயாரிப்பதற்கான ஒப்புதலை 2018 அக்டோபர் 24 அன்று கர்நாடக அரசுக்கு அளித்தது. இதன் பின்னர் 2019 ஜனவரியில் விரிவான திட்ட அறிக்கையை கர்நாடக அரசு மத்திய நீர் ஆணையத்திடம் சமர்ப்பித்தது. அதன் பிரதிகள் கூட்டு பாசன மாநிலங்களின் ஒப்புதலுக்காக அவற்றுக்கு அனுப்பப்பட்டன. மேகதாட்டு திட்டத்தை தொடங்க வேண்டாம் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் தெரிவித்து விட்டதாக 2021 ஜூலை 20 தேதியிட்ட கடிதத்தில் கர்நாடக அரசு தெரிவித்துள்ளது. தண்ணீர் மாநில அரசின் கட்டுப்பாடுக்கு கீழ் வரும் நிலையில், நீர் வளங்களின் பராமரிப்பு, மேலாண்மை உள்ளிட்டவை மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படுகின்றன. மாநில அரசுகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை மத்திய அரசு வழங்கி வருகிறது. நாடு முழுவதும் நீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. தண்ணீர் குறைபாடு உள்ள 256 மாவட்டங்களில் ஜல் சக்தி திட்டம்-1-ஐ இந்திய அரசு தொடங்கியது. 2021 மார்ச் 22 தண்ணீர் தினத்தன்று 'ஜல் சக்தி திட்டம்: மழை நீரை சேமியுங்கள்' எனும் திட்டத்தை பிரதமர் தொடங்கி வைத்தார். நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் மழை நீர் சேகரிப்பை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்துள்ள சில நடவடிக்கைகளை எனும் இணைப்பில் காணலாம்.

ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், குஜராத் மற்றும் உத்தரப் பிரதேச மாநிலங்களின் சில பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள பேலியோசேனல்கள் குறித்த ஆதாரங்கள் பற்றிய தகவல்கள், மத்திய நிலத்தடி நீர் வாரியம் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் திரட்டப்பட்டுள்ளன. தேசிய நிலத்தடி நீர் ஆதாரங்கள் கண்டறிதல் மற்றும் மேலாண்மை திட்டத்தை மத்திய நிலத்தடி நீர் வாரியம் செயல்படுத்தி வருகிறது. தண்ணீர் மாநில அரசின் கட்டுப்பாடுக்கு கீழ் வரும் நிலையில், பேலியோசேனல்களின் ஆய்வு மற்றும் பராமரிப்பு மாநிலங்களின் பொறுப்பாகும். இருந்த போதிலும், மத்திய நிலத்தடி நீர் வாரியம் சில ஆய்வுகளை செய்து வருகிறது. ஆறுகளை தூய்மைப்படுத்துதல் தொடர் நடவடிக்கையாக உள்ள நிலையில், மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முயற்சிகளுக்கு ஜல் சக்தி அமைச்சகம் உதவி அளித்து வருகிறது. 2015-16 முதல் 2020-21 நிதி ஆண்டு வரை, தேசிய கங்கை திட்டத்தின் கீழ் ரூ 4,631.40 கோடியையும், படித்துறை பணிகளுக்காக ரூ 217 கோடியையும் இந்திய அரசு ஒதுக்கியுள்ளது. நாட்டின் சில பகுதிகளில் நிலத்தடி நீரில் பாதிப்பு உண்டாக்கக்கூடிய ரசாயனங்கள் கலந்திருப்பது குறித்து அரசு அறியும். மக்களுக்கு பாதுகாப்பான தண்ணீரை வழங்குவதற்காக மாநிலங்களுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. தமிழகத்தை பொருத்த வரை, 28 மாவட்டங்களில் உப்புத்தன்மை கொண்ட நீரும், 25 மாவட்டங்களில் ஃபுளோரைடு அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் 1.5 மில்லிகிராமை விட அதிகமாக இருப்பதும், 29 மாவட்டங்களில் நைட்ரேட் அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் 45 மில்லிகிராமை விட அதிகமாக இருப்பதும், 9 மாவட்டங்களில் ஆர்சனிக் அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் 0.01 மில்லிகிராமை விட அதிகமாக இருப்பதும், 2 மாவட்டங்களில் இரும்பின் அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் 1 மில்லிகிராமை விட அதிகமாக இருப்பதும், 3 மாவட்டங்களில் லீடின் அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் 0.01 மில்லிகிராமை விட அதிகமாக இருப்பதும், 1 மாவட்டத்தில் காட்மியம் அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் 0.003 மில்லிகிராமை விட அதிகமாக இருப்பதும், 5 மாவட்டங்களில் குரோமியம் அளவு ஒரு லிட்டர் தண்ணீரில் 0.05 மில்லிகிராமை விட அதிகமாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

தண்ணீர் மாநில அரசின் கட்டுப்பாடுக்கு கீழ் வரும் நிலையில், நீர் வளங்களின் பராமரிப்பு, மேலாண்மை உள்ளிட்டவை மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படுகின்றன. மாநில அரசுகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை மத்திய அரசு வழங்கி வருகிறது. "விண்வெளி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்தியாவின் நீர் இருப்பு குறித்த மறு மதிப்பீடு" எனும் ஆய்வை மத்திய நீர் ஆணையம் 2019-ல் நடத்தியது. அந்த ஆய்வின் படி, நாட்டிலுள்ள 20 படுகைகளில் சராசரி வருடாந்திர நீர் வளங்களின் அளவு 1999.20 பில்லியன் கியூபிக் மீட்டர்கள் என கண்டறியப்பட்டுள்ளது. மேலும், நிலத்தடி நீர் அளவை பொருத்தமட்டில் 15 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ள 1114 அலகுகள் அதிகமாக பயன்படுத்தப்பட்ட பகுதிகள் என்றும், 270 அலகுகள் அபாய கட்டத்தில் உள்ளதாகவும், 1057 அலகுகள் ஓரளவு அபாய கட்டத்தில் உள்ளதாகவும், 4427 அலகுகள் பாதுகாப்பானவை என்றும், 97 அலகுகள் உப்புத்தன்மை மிக்கவை என்றும் கண்டறியப்பட்டுள்ளன. போலவரம் திட்டத்தை ஆந்திரப் பிரதேச அரசு செயல்படுத்தும் போதிலும், வடிவமைப்பு ஒப்புதல்கள் மத்திய நீர் ஆணையத்தால் வழங்கப்பட்டன. மேலும் திட்டத்தின் பாசன பகுதிக்கான மிச்சமிருக்கும் செலவில் 100 சதவீதத்தை இந்திய அரசு திரும்ப வழங்கும்.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமான அடல் புஜன் யோஜனாவின் மொத்த மதிப்பீடு ரூ 6000 கோடியாகும். இதில் ரூ 3000 கோடியை உலக வங்கி கடனாக வழங்குகிறது. குஜராத், ஹரியானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய ஏழு மாநிலங்களில் இருக்கும் நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்திய ஆற்றுப்படுகை அட்லஸ் மத்திய நீர் ஆணையம் மற்றும் இஸ்ரோவால் 2012-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்திய நீர்நிலை அட்லஸ் 2014-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. "விண்வெளி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்தியாவின் நீர் இருப்பு குறித்த மறு மதிப்பீடு" எனும் ஆய்வை மத்திய நீர் ஆணையம் 2019-ல் நடத்தியது. இவ்வாறு, நீர் நிலவரங்கள் குறித்த பல்வேறு ஆய்வுகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

பிரதமரின் கிரிஷி சின்ச்சயி யோஜனாவின் கீழ் 2015 முதல் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விரிவுபடுத்தப்பட்ட பாசன பலன் திட்டத்தின் கீழ் 2016-17-ம் ஆண்டு ரூ 3307.88 கோடியும், 2017-18-ம் ஆண்டு ரூ 3593.61 கோடியும், 2018-19-ம் ஆண்டு ரூ 2849.07 கோடியும், 2019-20-ம் ஆண்டு ரூ 1738.76 கோடியும், 2020-21-ம் ஆண்டு ரூ 1510.04 கோடியும் மத்திய அரசால் வழங்கப்பட்டது.

ஹர் கேட் கோ பானி திட்டத்தின் கீழ் 2016-17-ம் ஆண்டு ரூ 1001.91 கோடியும், 2017-18-ம் ஆண்டு ரூ 1678.13 கோடியும், 2018-19-ம் ஆண்டு ரூ 1343.23 கோடியும், 2019-20-ம் ஆண்டு ரூ 1217.97 கோடியும், 2020-21-ம் ஆண்டு ரூ 976.53 கோடியும் மத்திய அரசால் வழங்கப்பட்டது.

ஒரு துளிக்கு அதிக விளைச்சல் திட்டத்தின் கீழ் 2016-17-ம் ஆண்டு ரூ 1991.24 கோடியும், 2017-18-ம் ஆண்டு ரூ 2819.49 கோடியும், 2018-19-ம் ஆண்டு ரூ 2918.38 கோடியும், 2019-20-ம் ஆண்டு ரூ 2700.01 கோடியும், 2020-21-ம் ஆண்டு ரூ 2562.18 கோடியும் மத்திய அரசால் வழங்கப்பட்டது.

நீர்நிலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2016-17-ம் ஆண்டு ரூ 1471.72 கோடியும், 2017-18-ம் ஆண்டு ரூ 1691.82 கோடியும், 2018-19-ம் ஆண்டு ரூ 1780.55 கோடியும், 2019-20-ம் ஆண்டு ரூ 1472.33 கோடியும், 2020-21-ம் ஆண்டு ரூ 990.23 கோடியும் மத்திய அரசால் வழங்கப்பட்டது. தேசிய நதியான கங்கை மற்றும் அதன் துணை நதிகளில் மாசை தடுத்து, அவற்றை பாதுகாத்து புனரமைப்பதற்காக ரூ 20,000 கோடி மதிப்பீட்டில் நமாமி கங்கை திட்டம் 2014-ம் ஆண்டு ஜூன் மாதம் இந்திய அரசால் தொடங்கப்பட்டது. 2020 ஜூன் 30-ன் படி, நமாமி கங்கை திட்டத்தின் கீழ் தூய்மையான கங்கைக்கான தேசிய இயக்கத்திடம் ரூ 1040.63 கோடி நிதி இருக்கிறது. ஜல் சக்தி அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் மத்திய அரசு நிதியுதவி பெற்ற திட்டமான தேசிய நதி பாதுகாப்பு திட்டம், கங்கை படுகையை தவிர நாட்டிலிருக்கும் இதர ஆறுகளில் மாசை தடுப்பதற்காக செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை மத்திய அரசு வழங்கி வருகிறது,. மொத்தம் 64 ஆற்றுப் பகுதிகள் மாசடைந்ததாக இத்திட்டத்தின் கிழ் கண்டறியப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் இழ் தமிழ்நாட்டிற்கு 2019-2020-ம் ஆண்டு ரூ 1.37 கோடியும், 2020-21-ம் ஆண்டு ரூ 1.20 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

# தாராபுரத்தில் ஆணவ கொலை செய்த உண்மையான குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யக்கோரி தமிழ் புலிகள் கட்சியின் மாநில தலைவர் பங்கேற்பு



தாராபுரம், ஜூலை 28 2021: திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அடுத்த வீராச்சிமங்களம் பகுதியை சேர்ந்த மூட்டை தூக்கும் தினசரி கூலி தொழிலாளி கோபிநாத் (20), கடந்த 18ஆம் தேதி மடத்துப்பாளையம் அருகே அதிகாலை 5 மணி அளவில் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார், பத்து நாட்களாகியும் கொலை செய்யப்பட்ட உண்மையான கொலையாளியை காவல்துறையினர் கைது செய்யாமல் இருப்பதின் மர்மம் என்ன..? இவர்கள் உடனடியாக அவர்களை கைது செய்யவில்லை என்றால் இந்த சம்பவம் குறித்து உடனடியாக சிபிசிஐடிக்கு மாற்ற வேண்டி வேண்டும் என தமிழ் புலிகள் கட்சியின் மாநில தலைவர் நாகை திருவள்ளுவன் பேட்டி.. இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தாராபுரம் பழனி ஒட்டன்சத்திரம் திண்டுக்கல் ஈரோடு போன்ற ஊர்களில் உள்ள தமிழ் புலிகள் கட்சி சார்ந்த சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்..

# திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்க வந்த பெண்கள் கதறி அழுததால் பரபரப்பு.





திருவாரூர் ஜூலை 28, 2021: திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே 200 வருடங்களுக்கு மேலாக வசிக்கும் தங்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை என ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்க வந்த பெண்கள் ஒப்பாரி வைத்து கதறி அழுததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்திற்குட்பட்ட கொற்கை ஊராட்சியை சேர்ந்த தலைக்காடு கிராமத்தில் சுமார் 200 ஆண்டுகளாக வசித்து வரும் தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தங்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை என கூறியும், அரசு புறம்போக்கு நிலத்தில் வசிக்கும் எங்களை தலைக்காடு ஏரி ஆக்கிரமிப்பில் வசித்து வருவதாக கூறி அதிகாரிகள் குடியிருக்கும் இடத்தை காலி செய்ய சொல்வதாகாவும் கூறி ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்க வந்தனர்.

இது குறித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக வந்திருந்த சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சுப்பிரமணியன் செய்தியாளரிடம் கூறும்போது, 1971 ஆம் ஆண்டு கொண்டு வந்துள்ள குடியிருப்பு மனை வழங்கும் சட்டப் பிரகாரம் வருவாய்த்துறையினர் இவர்களுக்கு உரிய பட்டாவினை சட்டபூர்வமாக வழங்கவில்லை எனவும், இவர்கள் வசிக்கும் குடியிருப்புகள் கொண்ட புல எண் 477 கொற்கை கிராமத்தில் தலைக்காடு ஏரி என்று எவ்விதமான ஏரியும் கடந்த 200 ஆண்டுகளாக இருந்து வரவில்லை. அரசு வருவாய் கணக்கில் புஞ்சை தரிசு புறம்போக்கு நிலம் என்று தான் பதிவு செய்திருக்க வேண்டும். இந்த தவறான தலைக்காடு எரி என்ற வருவாய் பதிவு காரணமாக உரிய நடவடிக்கை எடுக்காமலும், உண்மை நிலையைக் கண்டறியாமலும் இதுநாள் வரையில் குடியிருப்பு பட்டா வழங்காமல் சட்ட விரோதமான காரியங்களை அதிகாரிகள் செய்து வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

மனு கொடுக்க வந்த பெண்கள் திடீரென்று தாங்கள் நான்கு தலைமுறைகளாக குடியிருக்கும் இடத்தை அதிகாரிகள் காலி செய்ய சொல்வதாகக் ஒப்பாரி வைத்து ,தரையில் விழுந்து புரண்டு அழுததால் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# அரசைக்கண்டித்து ராமேஸ்வரம் சங்குமால் துறைமுகத்தில் கடல் தொழிலாளர் சங்கம் (சிஐடியு) கண்டன ஆர்பாட்டம்



ராமேஸ்வரம், ஜூலை 28, 2021: இந்திய கடல் மீன்வள மசோதா 2021ஐ அமல்படுத்தவுள்ள ஒன்றிய அரசைக்கண்டித்து ராமேஸ்வரம் சங்குமால் துறைமுகத்தில் கடல் தொழிலாளர் சங்கம் (சிஐடியு) கண்டன ஆர்பாட்டம்.

பாரம்பரிய மீனவர்களாகிய நமது மீன்பிடி உரிமையை பறித்து கார்ப்பரேட் முதலாளிகளின் நவீன மீன்பிடி கப்பல்கள் கடல் வளத்தை அழித்து மீன்வளத்தை கொள்ளையடிக்க வழிவகுக்கும் இந்திய கடல் மீன்வள மசோதா 2021ஐ ஒன்றிய பாஜகவின் மோடி அரசு நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் நிறைவேற்ற இருப்பதை கைவிட வலியுறுத்தி கடல் தொழிலாளர் சங்கம் (சிஐடியு) நாட்டுப்படகு மற்றும் சிறுதொழில் மீனவர்கள் ராமேஸ்வரம் சங்குமால் மீன்பிடி துறைமுக கடற்கரையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கடல் தொழிலாளர் சங்கம் (சிஐடியு) தாலுகா செயலாளர் ஏ. ஜேம்ஸ் ஜஸ்டின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்பாட்டத்தில் ஓலைக்குடா கிராமத்தலைவர் எஸ். ஜெபமாலைபாஸ்கர், கடல்தொழிலாளர் சங்கம் (சிஐடியு) மாவட்ட தலைவர் இ. ஜஸ்டின், மாவட்ட செயலாளர் எம்.கருணாமூர்த்தி, மாவட்ட பொருளாளர் அ. சுடலைக்காசி, பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர் சங்கத்தலைவர் எஸ்.சகாயராஜ் மற்றும் சம்பை, மாங்காடு,வடகாடு, ஏரகாடு கிராம மீனவர்கள் கலந்துகொண்டு மத்திய அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர்.

# திருப்பூரில் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பாக ஆர்ப்பாட்டம்




திருப்பூர், ஜூலை 28, 2021: மத்திய அரசு கொண்டுவந்துள்ள விவசாயிகளுக்கு எதிரான சட்ட மசோதாவை திரும்பப் பெறக் கோரியும். தமிழகத்தில் ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுகின்ற நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும். இந்தியாவில் வரலாறு காணாத பெட்ரோல் டீசல் விலை உயர்வை ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டு வரச் சொல்லியும் விலையை கட்டுப்படுத்த சொல்லியும் கண்டன ஆர்ப்பாட்டம் மாநில துணைத் தலைவர் எஸ் கர்ணன் தேவர் தலைமையில். ரயில் நிலையம் அருகில் உள்ள மாவட்ட தலைமை தபால் அலுவலகம் முன்பு நடைபெற்றது. இதில் மத்திய அரசு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மகேஷ்குமார் மாநில குழு உறுப்பினர். ஈஸ்வரன் மாவட்ட விவசாய அணி பொதுச் செயலாளர். டெல்டா

தனசேகர் பல்லடம் ஒன்றிய பொதுச் செயலாளர். ரவி மாவட்ட துணைத் தலைவர். சங்கர் மாநகர துணை செயலாளர். பிரபு மாவட்ட தொழிற்சங்க செயலாளர். மொக்க மாயன் மாவட்ட இளைஞரணி செயலாளர். சின்னத்தம்பி மாவட்ட இளைஞரணி துணை தலைவர்.

முத்தையா மாவட்ட இளைஞரணி மற்றும் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

# மாணவர்களுக்கு நீட் தேர்வு அவசியம்: தமிழக அரசு கோவில்களை புனரமைப்பு செய்ய வேண்டும் திரைப்பட நடிகர் தாமு வேண்டுகோள்



மதுரை 28, 2021: மதுரை மாவட்டம் விக்கிரமங்கலம் அருகே கோவில்பட்டியில் உள்ள பழமை வாய்ந்த மரு தோதய ஈஸ்வரமுடையார் திருக்கோவில் ஆலயத்தில் திரைப்பட நடிகர் தாமு சாமி தரிசனம் செய்தார் தொடர்ந்து கோவில் வரலாற்றை கேட்டறிந்தார். பிறகு செய்தியாளர்களிடம் பேசியபோது கோவில் சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும் இதற்கு விசேஷ சக்தி உள்ளது. இந்த சக்தியை மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த கோவில் பிரதோஷத்திற்கு சிறப்பு வாய்ந்தது என்றும் இப்பகுதி மக்கள் உன் கோவிலில் வழிபட்டு புனிதம் காக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும் அவர் கூறுகையில் தற்போதுள்ள சூழ்நிலையில் மாணவர்களுக்கு அறிவை மேம்படுத்த நீட் தேர்வு அவசியம் என்றும் தமிழக அரசு சிதிலமடைந்த கோவில்களை புனரமைப்பு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதில் கோவில் நிர்வாகிகள் பிரதோஷ கமிட்டியினர் கலந்து கொண்டனர்.

# விக்கிரவாண்டி தாலுகாவில் பழங்குடியினருக்கு ஜாதி சான்றுகளை கலெக்டர் மோகன் வழங்கினார்



விக்கிரவாண்டி, ஜூலை 28 2021: விக்கிரவாண்டி தாலுகாவில் பழங்குடியினருக்கு ஜாதி சான்றுகளைகலெக்டர் மோகன் வழங்கினார். விக்கிரவாண்டி தாலுக்கா கீழ் நந்தி வாடியில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த 15 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இவர்கள் நீண்டகாலமாக தங்களுக்கு ஜாதிச் சான்று கோரியிருந்தனர்.

அதன் பேரில் நேற்று கலெக்டர் மோகன் கீழ் நந்தி வாடி கிராமத்திற்குச் சென்று அப்பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களை சந்தித்து அவர்களுக்கு இந்து காட்டுநாயக்கன் வகுப்பு ஜாதி சான்றிதழை 15 பேருக்கு வழங்கினார்.

ஆர்.டி.ஓ .,அரிதாஸ், தாசில்தார் தமிழ்ச்செல்வி, மண்டல துணை தாசில்தார் செல்வமூர்த்தி, பி.டி.ஓ., முபாரக் அலி பேக் ,வருவாய் ஆய்வாளர் திருமதி, வி.ஏ.ஓ ., சௌந்தர்ராஜன், சுந்தரமூர்த்தி உள்பட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கார்கில் வெற்றி தினத்தில், தேசிய போர் நினைவு சின்னத்தில் உயிர் நீத்த வீரர்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மரியாதை

புதுதில்லி, ஜூலை 28, 2021: கார்கில் வெற்றியின் 22வது ஆண்டு தினத்தில் தில்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில், உயிர் நீத்த வீரர்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நன்றி தெரிவித்தார். கடந்த 1999ம் ஆண்டு நடந்த கார்கில் மோதலில், ஆபரேஷன் விஜய் நடவடிக்கையின் போது நாட்டுக்காக உயிர்தியாகம் செய்த வீரர்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். தேசிய போர் நினைவிடத்தில் உள்ள பார்வையாளர் புத்தகத்தில், திரு ராஜ்நாத் சிங் குறிப்பிடுகையில், "இந்திய பாதுகாப்பு படையினரின் தியாகத்தை நாடு ஒருபோதும் மறவாது" என்றார். அவர்களின் வீரத்துக்கு நாடு நன்றியுடன் எப்போதும் கடன்பட்டுள்ளது, அவர்களின் கொள்கைகளை நாடு எப்போதும் பின்பற்றும் என அவர் மேலும் கூறினார். இது குறித்து சுட்டுரையில் கருத்து தெரிவித்த பாதுகாப்புத்துறை அமைச்சர், "தைரியமான வீரர்களின் உன்னத தியாகம், வரும் தலைமுறையினரையும் ஊக்குவிக்கும்" என கூறியுள்ளார். பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு அஜய் பட், விமானப்படை தளபதி ஏர் சீப் மார்ஷல் ஆர்கேஎஸ் பதாரியா, ராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம்.நரவானே, பாதுகாப்புத்துறை செயலாளர் டாக்டர் அஜய்குமார் மற்றும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு படை தலைவர் வைஸ் அட்மிரல் அதுல் குமார் ஜெயின் ஆகியோர் தேசிய போர்வீரர் நினைவு சின்னத்தில் உயிர்நீத்த வீரர்களுக்காக மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் மத்திய அரசு மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சக அதிகாரிகள் பங்கேற்றனர். கார்கில் மோதலில், இந்திய ராணுவ வீரர்கள், விமானப்படை உதவியுடன், கார்கில் மலைப் பகுதியில் மோசமான வானிலையிலும் எதிரிகளுடன் சண்டையிட்டு விரட்டியடித்தனர். இந்த முக்கியமான தருணத்தில், பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் கார்கில் வெற்றியை கொண்டாடி, உயிர்நீத்த வீரர்களை பெருமை மிக்க நாடு நினைவுக்கூர்கிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஒலிம்பிக் ஹாக்கியில் இந்தியா 3-0 என்ற கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தியது

## ரூபேந்திரபால் சிங் 2 கோல், சிம்ரன் ஜித்சிங் 1 கோல்

டோக்கியோ, ஜூலை 28 2021: ஒலிம்பிக் போட்டியில் இந்திய ஹாக்கி அணி 3-0 என்ற கணக்கில் ஸ்பெயின் அணியை வீழ்த்தியது.

32-வது ஒலிம்பிக் திருவிழா ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்து வருகிறது. இதில் ஆடவர் ஹாக்கி அணியின் ஏ பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணியுடன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஸ்பெயின், அர்ஜென்டினா ஆகிய நாடுகள் உள்ளன.

முதல் ஆட்டத்தில் நியூஸிலாந்தை வீழ்த்திய இந்திய அணி, ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் 1-7 என்ற கோல்கணக்கில் தோற்றது. இதைத் தொடர்ந்து இன்று இந்தியா - ஸ்பெயின் அணிகளுக்கிடையே லீக் போட்டி நடைபெற்றது. இதில் ஆட்டம் தொடங்கியதிலிருந்து ஸ்பெயின், இந்திய வீரர்கள் ஆக்ரோஷமாக பந்தைக் கடத்தினர். 4-வது நிமிடத்தில் இந்திய வீரர் மன்தீப் அடித்த ஷாட்டை ஸ்பெயின் கோல் கீப்பர் பிரான்சிஸ்கோ



தடுத்தார். 12-வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கார்னரை ஸ்பெயின் வீரர்கள் வீணாக்கினர்.

ஆட்டத்தின் 14-வது நிமிடத்தில் இந்திய வீரர் சிம்ரன் ஜித்சிங் அருமையாக கோல் அடித்து அணிக்கு முதல் கோலை பெற்றுக் கொடுத்தார். அடுத்த நிமிடத்தில் இந்திய வீரர் ரூபேந்திரபால் சிங் கோல் அடிக்க இந்திய அணிக்கு 2-வது கோல் கிடைத்தது.

முதல்காலிறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் இந்திய அணி முன்னிலை பெற்றது. 2-வது காலிறுதியில் ஆட்டத்தின் 24 நிமிடத்தில் ஸ்பெயின் அணிக்கும், 30-வது நிமிடத்தில் இந்திய அணிக்கும் கோல் அடிக்க கிடைத்த வாய்ப்பை தவறவிட்டனர். இதனால்2-வது பாதியிலும் இந்திய அணியே முன்னிலைபெற்றது. 3-வது காலிறுதியிலும் ஸ்பெயின் அணிக்கு கோல் அடிக்க வாய்ப்பை மிட்பீல்டர் விசன் ரூயிஸ் வீணடித்தார். இந்திய அணியின் ஆதிக்கம் அதிகரித்தவுடன், ஸ்பெயின் வீரர்களை கோல் அடிக்க விடாமல் தடுப்பாட்டத்தில் இந்திய வீரர்கள் கவனம் செலுத்தினர். இதனால் 3-வது காலிறுதியில் இரு கோல்வாய்ப்புகளை இந்திய வீரர்கள் தடுத்தனர்.

4-வது மற்றும் கடைசிக் காலிறுதியில் 50-வது நிமிடத்தில் ஸ்பெயின் அணி கோல் அடிக்க கிடைத்த வாய்ப்பையும் இந்திய அணி தடுத்துவிட்டது. ஸ்பெயின் வீரர் லியானார்டோ அடித்த பந்தை, இந்திய வீரர் சுரேந்திர குமார் தடுத்துவிட்டார். 51-வது நிமிடத்தில் இந்திய வீரர் ரூபேந்திர பால்சிங் தன்னுடைய 2-வது கோலையும், அணிக்கு 3-வது கோலையும் பெற்றுக்கொடுத்து 3-0 என்ற கணக்கில் முன்னிலைப்படுத்தினார். ஆட்டத்தின் இறுதிவரை ஸ்பெயின் அணியால்கோல் அடிக்க முடியாததால், 0-3 என்ற கோல் கணக்கில் இந்திய அணி வென்றது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி மளிகைப் பொருட்கள் வழங்கிய அமைச்சர் கே எஸ் மஸ்தான்



செஞ்சி,ஜூலை 28, 2021: விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மற்றும் அதனை அதன் சுற்றுவட்டார பகுதிகளான மேல்மலையனூர் கணக்கன்குப்பம், கெங்கபுரம், சிட்டாம்பூண்டி போன்ற பகுதியில் வசிக்கும் மாற்றுதிறனாளிகளுக்கு அரிசி மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் வழங்கும் நிகழ்ச்சி திண்டிவனம் சாலையில் ஸ்ரீ கன்னிகா பொபைல்ஸ் & ஸ்ரீ கன்னிகா சாரிட்டபிள் டிரஸ்ட் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் 50-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் நலத் துறை அமைச்சர் கே எஸ் மஸ்தான் அரிசி உள்ளிட்ட மல்லிகை தொகுப்பினை வழங்கினார். இதில் ஸ்ரீ கன்னிகா மொபைல்ஸ் & ஸ்ரீ கன்னிகா சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனர் கே. ஜி.ரமேஷ் பாபு மற்றும் செஞ்சியை சேர்ந்த ரோட்டரி முன்னாள் தலைவர் இளங்கோவன் மனவளக்கலை மன்ற பேராசிரியர் பாலு கெங்கவரம்த்தை சேர்ந்த பாலு டி ஏ கே காய்கறி கடை உரிமையாளர் அம்ஜத்கான் கீழ்பெண்ணாத்தூர் குரு மூர்த்தி உள்ளிட்ட வாசவி ஜோதி குழுவினர் கலந்து கொண்டனர். நிவாரன பொருட்களை பெற்றுக்கொண்ட மாற்றுத்திறனாளிகள் ஸ்ரீ கன்னிகா சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனர் கே. ஜி. ரமேஷ் பாபு-க்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

# விக்கிரவாண்டி முட்டத்தூரில் தே.மு.தி.க., ஆலோசனை கூட்டம்



விக்கிரவாண்டி, ஜூலை 28.2021: விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய தே.மு.தி.க., நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. விக்கிரவாண்டி அடுத்த முட்டத்தூரில் நடந்த மேற்கு ஒன்றிய தே.மு.தி.க., நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய செயலாளர் ஞான சேகரன் தலைமை தாங்கினார் . ஒன்றிய துணை செயலாளர் மோகன் முன்னிலை வகித்தனர் . ஒன்றிய துணை செயலாளர் நாராயணன் வரவேற்றார் .

மாவட்ட துணை செயலாளர் சூடாமணி கலந்து கொண்டு ஆகஸ்ட் 25 ம் தேதி அன்று கட்சி தலைவர் விஜயகாந்த் பிறந்த நாள் விழாவை சிறப்பாக நடத்துவது குறித்து ஆலாசனைகளை கூறினார் . கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதிகள் அருணகிரி, சுரேஷ், செல்லப்பன், நடேஷ்குமார், ஒன்றிய தொண்டரணி செயலாளர் சிவக்குமார் , கிளை கழக செயலாளர்கள் உள்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கொவிட் பாதிப்பு ஏற்பட்ட தாய், தனது குழந்தைக்கு தொடர்ந்து பாலூட்ட வேண்டும் - டாக்டர் மஞ்சு பூரி

புதுதில்லி, ஜூலை 28, 2021: கர்ப்பக் காலத்தில் கொவிட்-19 தடுப்பூசி செலுத்த சமீபத்தில் எடுக்கப்பட்ட முடிவு பற்றியும், கொவிட்-19 பாதிப்பிலிருந்து பெண்களும், அவர்களது குழந்தைகளும் பாதுகாத்துக்கொள்ள என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றியும் புதுதில்லி, லேடி ஹார்டிங்கே மருத்துவ கல்லூரியின், மகப்பேறு மருத்துவ துறை, தலைவர் டாக்டர் மஞ்சு பூரி அளித்த பேட்டி: கர்ப்ப காலத்திலும், பெண்கள் கொவிட்-19 தடுப்பூசி போட்டுக் கொள்ள தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறு உதவும்? கொரோனா இரண்டாம் அலையின்போது, பல பெண்களுக்கு கர்ப்பக் காலத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டது. கொரோனா பாதிப்பு கடுமையானால், இது கர்ப்பக் காலத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்தும், குறிப்பாக, கடைசி மூன்று மாதங்களில் கருப்பை விரிவடைந்து உதரவிதானத்தில் அழுத்தி, ரத்தத்தில் ஆக்ஸிஜன் செறிவு குறைத்து தாய் மற்றும் சேய் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாலம். அந்த பெண்ணுக்கு சிக்கலை ஏற்படுத்தலாம். கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டால், கர்ப்பிணிப் பெண்கள் இதுபோன்ற தீவிரமான பாதிப்தை தடுக்க உதவும். தாய் தடுப்பூசி செலுத்திக்கொண்டால், அதன் மூலம் அவரது உடலில் உருவாகும் எதிர்ப்பு சக்தி, கருவில் இருக்கும் குழந்தைக்கும் ரத்தம் மூலம் சென்று, பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது. தாய்ப்பாலூட்டும் பெண்கள் தடுப்பூசி போட்டுக்கொண்டால், தாய்ப்பால் மூலம் குழந்தைக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. பெண்கள் தடுப்பூசி போட்டுக் கொண்டால் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும் என சிலர் நம்புகின்றனர். இது உண்மையா? இவையெல்லாம் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் வதந்திகள். தவறான தகவல், தொற்றைவிட அதிக ஆபத்தானது. கொவிட்-19 தடுப்பூசிகள் புதியவை என்றாலும், பரிசோதனை தொழில்நுட்பங்கள் மூலம் அவை உருவாக்கப்பட்டுள்ளன. உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்க தடுப்பூசிகள் உதவுகின்றன. இது உடலின் மற்ற திசுக்களை பாதிப்பதில்லை. உண்மையிலேயே, பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் ஹெபாடிடிஸ் பி, இன்ப்ளூயன்சா, கக்குவான் இருமல் தடுப்பூசிகளை நாம் போடுகிறோம். இது தாயையும், கருவில் உள்ள குழந்தையையும் பாதுகாக்கிறது. அதோடு, கர்ப்பிணி பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்த பிறகே, அவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த நமது மருத்துவ ஒழுங்குமுறையாளர்கள் அனுமதி வழங்கினர். தடுப்பூசிகள் மலட்டு தன்மை ஏற்படுத்தும் என்பதற்கு அறிவியல்பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. கொரோனா தடுப்பூசிகள், இனப்பெருக்க உறுப்புகளை எந்தவிதத்திலும் பாதிக்காது.

கொவிட் பாதிப்பு ஏற்பட்ட தாய், தனது பச்சிளம் குழந்தையை பாதுகாக்க என்ன முன்னெச்சரிக்கை எடுக்க வேண்டும்? ஒரு தாய் தனது குழந்தைக்கு தொடர்ந்து தாய்ப்பால் கொடுக்க வேண்டும். மற்ற நேரத்தில் குழந்தையை தன்னிடமிருந்து 6 அடி தூரத்தில் பராமரிக்க வேண்டும். குழந்தையை கவனித்துக் கொள்ள, தொற்று பாதிப்பு இல்லாத நபரை வைத்துக் கொள்ளலாம். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் முன், தாய் தனது கைகளை கழுவி, முகக்கவசம், முக தடுப்பான் போன்றவற்றை அணிய வேண்டும். தனது சுற்றுப்புறத்தை கிருமிநாசினி மூலம் அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். குழந்தையை கவனிக்க ஆள் இல்லை என்றால், தாய் எப்போதும் முகக்கவசம் அணிந்து, குழந்தையிடம் இருந்து முடிந்தவரை சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். தாயும், குழந்தையும், காற்றோட்டமுள்ள அறையில் தங்க வேண்டும். தாய் தனது கைகள் மற்றும் சுற்றுப்புறத்தை தவறாமல் சுத்தம் செய்ய வேண்டும்.

# தமிழக அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி வழங்க முதல்வருக்கு கோரிக்கை



விக்கிரவாண்டி, ஜூலை 28. 2021: மத்திய அரசுப் பணியாளர்களை போல தமிழக அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி வழங்க வேண்டும் என தமிழ் நாடு அரசுப் பணியாளர் சங்கம் தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சங்கத்தின் மாநிலத் துணைத்தலைவர் கவிஞர் சிங்காரம் வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்தி அறிக்கையில் கூறியுள்ளதாவது : மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கியது போல தமிழ் நாடு அரசுப் பணியாளர்களுக்கும் 1.7.2021முதல் 11 சதவிகித அகவிலைப் படியினை ரொக்கமாக வழங்க வேண்டும் எனவும் ,புதிய ஒய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஒய்வூதியதிட்டத்தை அமல்படுத்த வேண்டும் எனவும் , மாதந்தோறும் மருத்துவ படியினை ரூ.1000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் எனவும் , தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி, வெளி ஆதார பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் எனவும், சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் துறை கிராம உதவியாளர்கள், பல்நோக்கு மருத்துவ பணியாளர்கள் ஆகியோரை பணி நிரந்தரம் செய்து கால முறை ஊதியம் வழங்க வேண்டும். இவ்வாறு செய்தி அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

# சென்னை வானகரம் அப்போலோ சிறப்பு மருத்துவமனையில் வலிப்பு நோய்க்கு அதிநவீன சிகிச்சை மையம் தொடங்கப்பட்டுள்ளது

சென்னை, ஜூலை 28 2021: சென்னை வானகரத்தில் உள்ள அப்போலோ சிறப்பு மருத்துவமனையில், வலிப்பு நோயால் பாதிக்கப்படவர்களுக்கு உதவும் வகையில் அதிநவீன வலிப்பு நோய் சிகிச்சை மையம் லெவல் ஃபோர் எபிலெப்சி கேர் சென்டர் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நவீன கால்-கை வலிப்பு சிகிச்சை மையத்தை தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் ஐ.ஏ.எஸ்., ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

வலிப்புத் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், வலிப்பு அறுவை சிகிச்சைகள் உட்பட உயர் மட்ட சிகிச்சைகளை வழங்குவதற்கும் நவீன சிகிச்சைகள் உள்ளூரிலேயே துரிதமாக வழங்கப்படுவதற்கும் இந்த நான்காம் நிலை வலிப்பு சிகிச்சை மையம், வானகரம் அப்போலோ சிறப்பு மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளது. மொத்த உலக மக்கள்தொகையில் வலிப்பு நோயால் சுமார் 1.2 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 25 பேரில் ஒருவர் தங்கள் வாழ்நாளில் வலிப்புத் தாக்கங்களால் பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பைக் கொண்டுள்ளனர், இந்தியாவில் 1 கோடிக்கும் அதிகமான நபர்கள் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 70 சதவீதம் பேருக்கு, வலிப்புத்தாக்கங்களை ஒன்று அல்லது இரண்டு வலிப்பு எதிர்ப்பு மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தலாம். வலிப்புத்தாக்கங்களைக் கொண்ட பெரும்பான்மையானவர்களை மருத்துவரால் திறம்பட நிர்வகிக்க முடியும். ஆனால் நிலையான சிகிச்சையின் மூலம் பலனளிக்காத வகையில் 30 சதவீதம் பேர் உள்ளனர். அவர்களது வலிப்புத்தாக்கங்களைக் கட்டுப்படுத்துவது கடினம். அவர்களுக்கு வலிப்பு நோய் சிகிச்சை மையத்தில் உயர் நிலை சிகிச்சை மற்றும் பராமரிப்பு தேவைப்படுகிறது. வலிப்பு நோய் சிகிச்சை மையத்தில் அனுபவம் வாய்ந்த நரம்பியல் நிபுணர்கள், குழந்தை நரம்பியல் நிபுணர்கள், வலிப்பு நோய் சிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் உளவியலாளர்கள், நரம்பியல் தொழில்நுட்ப வல்லுநர்கள், மறுவாழ்வு நிபுணர்கள் மற்றும் மறுவாழ்வு சிறப்புப் பணியாளர்கள் செவிலியர்கள் அடங்கிய ஒரு பிரத்யேக குழு இருக்கும். இந்த சிறப்பு சிகிச்சை மையத்தின் தொடக்க நிகழ்ச்சியின் போது பேசிய அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தின் மேலாண்மை இயக்குநர் சுனிதா ரெட்டி "அப்போலோவில் நாங்கள் எப்போதும் நோயாளிகளுக்கு உலகளாவிய தரமான சுகாதார சேவையை வழங்க பாடுபட்டு செயலாற்றுகிறோம். திறமை, தொழில்நுட்பம் மற்றும் நோயாளிகள் பராமரிப்பு ஆகியவற்றை மேம்படுத்த நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறோம். தற்போது தொடங்கப்பட்டுள்ள இந்த அதிநவீன, அதிதீவிர சிகிச்சைகளை அளிக்கவல்ல லெவல் 4 வலிப்பு நோய் சிகிச்சை மையம் நீண்டகாலமாக வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நல்ல சிகிச்சையை வழங்கி அவர்களுக்கு சிறந்த பலன்களை வழங்கும்." என்றார்.



இந்த அதிநவீன அதிதீவிர சிகிச்சைகளை அளிக்கவல்ல லெவல் ஃபோர் வலிப்பு சிகிச்சை மையம், தொடர்ச்சியான வலிப்புத் தாக்கங்களைக் கொண்ட நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சையை வழங்கும். மூளையை அதிக அளவில் சேதப்படுத்தும் ஆற்றலைக் கொண்ட, தீவிரம் மிக்க வலிப்பு நோய் குறித்து, நோயாளிகளுக்குத் தகவல்களை வழங்கி விரைவான சிகிச்சையை இந்த மையம் அளிப்பதுடன் அவர்கள் சிறப்பாக வாழ்வதற்கான நம்பிக்கையையும் வழங்கும். அப்போலோ மருத்துவமனை, டாக்டர் பிரதாப் சி ரெட்டி-யால் 1983-ம் ஆண்டில் இந்தியாவின் முதல் கார்ப்பரேட் மருத்துவமனையாக சென்னையில் தொடங்கப்பட்டது. ஆசியாவின் பெரும் நம்பிக்கையைப் பெற்ற ஒருங்கிணைந்த மருத்துவ சுகாதார குழுமமாகத் திகழும் அப்போலோ, தற்போது 71 மருத்துவமனைகளில் 12,000-க்கும் மேற்பட்ட படுக்கைகள் உள்ளன. 3300-க்கும் மேற்பட்ட மருந்தகங்கள், 90 ஆரம்ப சிகிச்சை மையங்கள் மற்றும் 150 பரிசோதனைக் கூடங்களும் உள்ளன. 110-க்கும் மேற்பட்ட டெலிமெடிசின் மையங்களும், 15-க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்வி மையங்கள் மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை ஆகியவையும் உள்ளன. ஆராய்ச்சி அறக்கட்டளையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆய்வு நிறுவனத்தில் உலக அளவிலான மருத்துவ சேவை சோதனை முயற்சிகள், தொற்றுநோயியல், ஸ்டெம் செல் ஆராய்ச்சி, மரபணு ஆய்வு உள்ளிட்ட பல பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்போலோ மருத்துவமனை பல முன்னணி, நவீன மருத்துவ முறைகளை நடைமுறைப்படுத்துவதில், மருத்துவ கண்டுபிடிப்புகளில் முதலீடு செய்வதில் முதன்மையான நிறுவனமாக திகழ்கிறது. ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் ஆஸ்ரேலிய பகுதிகளிலேயே முதலாவதான ப்ரோட்டான் சிகிச்சை மையத்தை சென்னையில் அப்போலோ மருத்துவமனை நிறுவியுள்ளது. ஒவ்வொரு நான்கு நாட்களிலும் அப்போலோ மருத்துவமனை குழுமம் 10 லட்சம் மக்களை ஏதோ ஒரு வகையில் தொடுகிறது. இந்திய அரசாங்கம் அப்போலோ மருத்துவமனைக்காக நினைவு தபால் தலையை வெளியிட்டுள்ளது. இது அரிதாக வழங்கப்படும் கவுரவம் ஆகும். மருத்துவமனை ஒன்றுக்கு இந்த கவுரவம் கிடைத்தது இதுவே முதல் முறை. அப்போலோ மருத்துவமனை தலைவர் பிரதாப் ரெட்டிக்கு மத்திய அரசு 2010-ம் ஆண்டு பத்ம விபூஷன் விருது வழங்கி கவுரவித்துள்ளது. கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக உலகத் தரம் வாய்ந்த மருத்துவ கண்டுபிடிப்புகளில் தனது முதன்மைத்துவத்தை தொடர்ந்து தக்க வைத்துவருவதோடு, உலகத்தரத்திலான மருத்துவ சேவைகளையும், அதிநவீன தொழில்நுட்பங்களையும் மேற்கொண்டு வருகிறது. மிகவும் மேம்பட்ட மருத்துவ சேவைகளை வழங்குவதில் நம் நாட்டின் மிகச்சிறந்த மருத்துவமனைகளில் தொடர்ந்து முக்கிய இடத்தை தக்கவைத்திருக்கிறது.

# கூடுதல் கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - அமைச்சர் பொன்முடி



சென்னை, ஜூலை 28, 2021 : பொறியியல் கல்லூரிகளில் 75 சதவீத கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும் என்று அமைச்சர் பொன்முடி கூறினார்.

தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை இணைத்ததில் எந்த தவறும் இல்லை. அண்ணா தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை பெயரளவில் அறிவித்து விட்டு வெறும் 4 பேரை மட்டுமே நியமித்துள்ளனர். எந்த நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. இனி அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைப்பு பல்கலைக்கழகமாக ஜெயலலிதா பல்கலைக்கழகம் செயல்படும்.


என்ஜினீயரிங் கல்லூரிகளில் 75 சதவீத கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும். பி.எட். படிப்புக்கும் கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கக்கூடாது. இதுதொடர்பாக உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கூடுதல் கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசியல் அமைப்பு சட்டப்படி மத்திய அரசு என்பது ஒன்றிய அரசு தான். எனவே, உயர்கல்வித்துறை பாடப்புத்தகங்களிலும் மத்திய அரசு என்பது ஒன்றிய அரசு என்று மாற்றப்படும்.

தமிழகத்தை பொறுத்தமட்டில் எந்த புத்தகமாக இருந்தால் ஒன்றிய அரசு என்று தான் இடம்பெறும். கல்லூரிகளை திறப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக அனைத்து பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்து ஆலோசித்து முதலமைச்சர் உரிய முடிவு எடுப்பார்.

இவ்வாறு அவர் கூறினார்.



ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி சீத்தாராம்தாஸ்நகரில் உள்ள மீன் வியாபாரி வீட்டில் மர்ம நபர்கள் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துள்ளனர் இதில் ஒருவர் காயமடைந்து க.விலக்கு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தேனி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் நேரில் ஆய்வு செய்தார். மர்ம நபர்கள் யாரென்று ஆண்டிபட்டி காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.



மதுரை: மதுரை மாவட்டம் அழகர்கோவில் அருகே கிடாரிபட்டி கிராமத்தில்கிராம மக்களின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கிடாரிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஹேமலதா மதிவாணன் சீரிய முயற்சியின் படி ரூ 93000 மதிப்பீட்டில் 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி அமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. இதன் மூலம் கிராம மக்கள் அவசர தேவைக்கு என்நேரமும் தங்குதடையின்றி தண்ணீர் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிளாடி பட்டி கிராம மக்கள் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

ஹலோ மிரர் மெட்ராஸில்
விளம்பரம் செய்து பயன் பெறுவீர்

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Wednesday, July 28, 2021 | Rs.2/- | ISSUE - 14

## Union WCD Minister, Smt Smriti Irani Launches 24/7 Helpline for Women Affected by Violence

New Delhi: 28 July 2021: With the objective of further improving safety and security of women across the nation and in line with Union Government's efforts towards overall betterment of women, the Union Minister for Women and Child Development, Smt Smriti Zubin Irani today inaugurated the National Commission for Women's 24/7 helpline number - 7827170170. The helpline aims to provide 24/7 online support to women affected by violence through referral by linking them with appropriate authorities such as police, hospitals, District Legal Service Authority, psychological services etc.




Inaugurating the helpline virtually, Union WCD Minister Smt. Irani congratulated the NCW for this initiative and lauded the new helpline. She said that this digital helpline gives a message to women that whenever they are in need, their government and their Commission will stand by them. She also congratulated the entire NCW team for the "stupendous" efforts for helping women especially during the pandemic. She said that the partnership between NCW and WCD goes a long way in ensuring a seamless intervention to help women in distress.

Speaking on the occasion, NCW Chairperson Ms. Rekha Sharma said that the helpline strengthens the commissions existing complaint mechanism and the helpline will enable women in need of support and counseling to get help in time. She said "We are always inspired by Prime Minister Shri Narendra Modi who is tirelessly working for the betterment of women. From women empowerment to women-led empowerment, we have seen many changes in his able leadership which inspires us to do better.

The objective of the Helpline is to provide 24-hour complaints and counseling services to women affected by violence by linking them with appropriate authorities such as police, hospitals, District Legal Service Authority psychological services and providing information about women related government programmes across the country through a single uniform number. The helpline will function with a team of trained experts. Any girl or woman aged 18 years and above can seek help by calling on this Helpline which will be operated from the premises of the National Commission for Women, New Delhi.

NCW under its statutory mandate has been looking into complaints under various categories of violence/deprivation of women rights from across the country. These complaints are received in writing or online through its website i.e., www.ncw.nic.in. The Commission processes complaints to facilitate in providing adequate and expeditious relief to women ensuring suitable redressal of grievances. In order to strengthen and expand the complaint platform, the Commission took the initiative to start this Digital Helpline. This helpline service has been developed in collaboration with Digital India Corporation, Ministry of Electronics and Information Technology.

NCW accords utmost priority to safety of women. Keeping in line with its initiatives for aggrieved women, the Commission has started this new helpline to facilitate integrated range of services for women affected by violence under one roof such as help from police, psycho-social counselling and access to One Stop Centres among other services. The helpline will be functional round-the-clock to facilitate help on issues related to violence against women.

The Union Minister for Women and Child Development, Smt Smriti Zubin Irani inaugurated the 24/7 helpline number virtually along with Secretary, WCD, Shri Indevar Pandey and NCW Chairperson Ms. Rekha Sharma in the presence of Members of the Commission and Shri Vinay Thakur, Senior Director (Research), Digital India Corporation.

## Seamless online billing and digital payment of bills for consumers

New Delhi, 28 July 2021: As per Para 8.4.3 of Tariff Policy 2016 "the Appropriate Commission may provide incentives to encourage metering and billing based on metered tariffs, particularly for consumer categories that are presently unmetered to a large extent. The metered tariffs and the incentives should be given wide publicity. Smart meters have the advantages of remote metering and billing, implementation of peak and off-peak tariff and demand side management through demand response. These would become essential in future for load-generation balancing due to increasing penetration of intermittent type of generation like wind and solar power.

Appropriate Commission shall, therefore, mandate smart meters for:

(i) Consumers with monthly consumption of 500 units and more at the earliest but not later than 31.12.2017

(ii) Consumers with monthly consumption above 200 units by 31.12.2019".

The aims and objectives of installing Smart Meters are to help consumers in seamless online billing process & digital payment of bills; having access to real time tracking of electricity usage; helping consumers track their consumption patterns and adopt more energy-efficient behaviours and appliances; offering them an option to pre-pay for electricity based on their requirements and thus be in control of their total energy spends; enable time of day metering and thus, playing a pivotal role in the integration of renewable power; helping DISCOMs function remotely by eliminating manual collections and reduced AT&C losses.

Under National Smart Grid Mission (NSGM), 7.23 lakh smart meters have been sanctioned. State-wise/project-wise details are as under: Chandigarh (Sub Division 5 Project) – 29500 installation is in progress and is scheduled to be completed by March 2022. Chandigarh (Complete City Project) – 184000 scheduled to be completed by March 2022.

Jharkhand (Ranchi City Project) – 360000 tendering is in process and is scheduled to be completed by March 2024.

Rajasthan (6 towns Integrated Project) – 150000 installation is in progress and is scheduled to be completed by March 2022.

This information was given by Union Minister for Power and New and Renewable Energy, Shri R.K. Singh in a written reply in Rajya Sabha today.

## Measures Adopted To Reduce Pollution during Coal Transportation & To Check Illegal Mining of Coal

Chennai, July 28, 2021: Coal mining operations have some impact on environment in terms of change in land use pattern, dust, air, water and noise pollution. It is mandatory for all projects of CIL to get the Environmental Management Plan (EMP) approved by the competent authority before commencing the mining operations. A detailed Environment Impact Assessment (EIA) is carried out for each project considering pre and post mining conditions for preparing EMPs which are discussed in detail by the Environmental Appraisal Committee (EAC) of experts under MoEF&CC. On the basis of the discussions, EAC recommends the case and accordingly Environment Clearance (EC) is granted by the MoEF&CC. While granting EC, MoEF&CC stipulates conditions/ mitigation measures for implementing the EMPs which have to be complied with by the project proponents. On obtaining EC, the project proponent also secures Consent to Establish (CTE) and Consent to Operate (CTO) under the provisions of Water and Air Acts from the concerned State Pollution Control Boards (SPCB). During the course of implementation of the project, the compliance of the conditions laid in the EC is being monitored through regional offices of MoEF&CC, SPCBs and internally by coal companies. Measurements of pollutant levels for coal mines as enumerated in GSR 742 (E) dated 25.09.2000 is implemented and the report so generated is sent to regional offices of MoEF&CC and SPCB. Further, Ministry of Railways has issued guidelines/directions to all Zonal Railways in April 2018, for action to be taken with regard to handling of pollution intensive commodities at sidings and goods sheds in accordance with the provisions of State Pollution Control Board.

The following control measures adopted by CIL for Air Pollution caused due to transportation of Coal:

Low capacity tippers (10-12 Tonne) are progressively being replaced by large tippers (35 tonne) to reduce the number of trips resulting in reduction in air pollution levels.

Roads are black-topped, coal carrying trucks are optimally loaded and covered with tarpaulin.

Mobile water sprinklers are deployed along the haul roads;

Projects have started implementing effective methods for dust control on roads by deploying Road sweeping machines. Wheel washing is also being progressively implemented in mines.

Quantum of coal transported by conveyors as part of First Mile Connectivity (FMC) projects to siding is being continuously increased to minimise generation of dust due to road transportation.

Tree plantation:

Plantation on inactive OB Dumps is done to minimize soil erosion;

Tree Plantation is done around the source of air pollution like mine, infrastructure and roads to reduce air pollution;

Green belt has been provided around the mine as well as residential colony for noise attenuation;

Keeping above objectives in view, extensive tree plantation programme is undertaken every year by the coal companies. CIL has planted more than 94 lakh of saplings over an area of about 3,873 Ha in inside mine lease area and around 7.13 lakh saplings over an area of about 500 Ha in outside mine lease area during last five years i.e. from FY 2016-17 to FY 2020-21.

## Housing Provisions to Transgender Persons

Chennai July 28, 2021: Ministry of Social Justice and Empowerment is formulating a scheme for the welfare of the Transgender persons wherein setting up of shelter homes for destitute and needy Transgender Persons is included as one of the components.

Ministry of Social Justice and Empowerment has initiated 12 pilot shelter homes and provided financial assistance to community based organizations (CBOs) for setting up of these shelter homes 'Garima Greh' for Transgender persons. These pilot shelter homes are in States of Maharashtra, Delhi, West Bengal, Rajasthan, Bihar, Chhattisgarh, Tamil Nadu and Odisha. The main aim of these shelter homes is to provide safe and secure shelter to Transgender persons in need. These shelter homes would provide basic amenities like food, medical care, recreational facilities and also conduct capacity-building/skill development programmes for Transgender persons.



This Ministry is not implementing any Pension scheme. However, the Ministry of Rural Development implements the National Social Assistance Programme (NSAP) in which 3,384 Transgender are being provided monthly pension.

This information was given by The Minister of State for Social Justice and Empowerment shri A. Narayanswamy in the Loksabha in a written reply.

## Status of medicinal plants conservation and development areas

New Delhi, 28 July 2021: The National Medicinal Plants Board (NMPB), Ministry of AYUSH is implementing a "Central Sector Scheme on Conservation, Development and Sustainable Management of Medicinal Plants" since 2014-15. Under this scheme, the National Medicinal Plants Board has provided project based support to establish Twenty Four (24) Medicinal Plants Conservation and Development Areas (MPCDAs) in seven states. An amount of Rs. 940 Lacs was sanctioned and Rs. 635.99 Lacs released for establishing above mentioned Medicinal Plants Conservation and Development Areas (MPCDAs).

The role of Medicinal Plants Conservation and Development Areas (MPCDAs) is in-situ conservation/protection of medicinal plants in their natural habitats. The long term benefit of MPCDAs is also to generate livelihood for Local/Tribal communities through sustainable utilization.

This information was given by Minister of State for Ayush Shri Mahendrabhai Munjapara in a written reply in Rajya Sabha today.

## Initiative to popularise the treatment of various diseases through AYUSH system

New Delhi, 28 July 2021: The Ministry of AYUSH under its Central Sector Scheme for promotion of International Cooperation, undertakes various initiatives for international promotion, propagation & Global acceptability of AYUSH systems of medicine such as Bilateral & Multilateral negotiations with different countries to undertake various steps for trade facilitation, recognition to Ayush System, establishing a dedicated AYUSH Export Promotion Council (AEPC) to promote export of Ayush products/ Medicines/Services, support to Industry & Hospitals for participation in International Exhibitions, deputation of experts to various countries establishing quality standards by collaborating with International Agencies like WHO, ISO etc., encouraging outbound investment, establishing International Ayush Institutes, offering scholarship to foreign nationals for pursuing Ayush courses in India etc.

The Government has developed Champion Services Sector Scheme for Medical value Travel to enhance medical tourism in the field of Ayush and to provide support establishing world class state of the art AYUSH hospitals. The Govt. has also formed a National Medical & Wellness Tourism Board to boost Medical, Wellness, Yoga and Ayurveda tourism. The Government of India is aiming to position India as a destination for health and wellness tourism through Ayush System.

Govt of India has taken various policy initiatives to promote Indian Traditional System of Medicine such as launching of National AYUSH Mission (NAM) to envisage better access to AYUSH services through increase in the number of AYUSH Hospitals and Dispensaries, inclusion of Ayush in National Programme for Prevention and Control of Cancer, Diabetes, Cardio-vascular diseases and Stroke (NPCDCS), operationalization of 12,500 AYUSH Health and Wellness Centres under Ayushman Bharat to provide AYUSH services, introducing insurance coverage for Ayush treatments, disseminating the merits of AYUSH systems through Print/Electronic/Social



Media Platforms. The AYURSWASTHYA YOJANA, a new umbrella scheme has been developed to roll out of authentic classical AYUSH Interventions for promoting community health care and to provide support for establishment of Ayush medical health unit in reputed Ayush and Allopathy institutions.

This information was given by Minister of State for Ayush Shri Mahendrabhai Munjapara in a written reply in Rajya Sabha today.

## Fire Service conducted Fire and First Aid Classes



Chennai, July 28, 2021: North Chennai Fire Service conducted Fire and First Aid Classes on 22.07.2021 in the presence of K. Rajesh Kannan, Dist. Fire Officer, Siva Baskaran, Asst. Dist. Fire Officer. Other station Officers and Volunteers also participated. M.D.Elangovan, Retd., Tahsildar conducted First Aid Session.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction